தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 16.12.2024

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் அலுவலர்களுக்கான வேளாண் சந்தைப்படுத்தல் தொடர்பான பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநரகத்தின் பயிற்சிப் பிரிவு மற்றும் ஹைதராபாத்தில் உள்ள தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிறுவனமும் இணைந்து 10.12.2024 முதல் 13.12.2024 வரை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் வேளாண் அலுவலர்களுக்கான வேளாண் சந்தைப்படுத்தல் தொடர்பான பயிற்சியினை ஏற்பாடு செய்திருந்தது.

இப்பயிற்சியின் துவக்க விழாவில் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் இரா.தமிழ் வேந்தன் அவர்கள் கலந்து கொண்டார்கள். தனது உரையில் வேளாண் பொருட்களை சந்தைப்படுத்துதலில் முக்கியத்துவம் குறித்தும், வேளாண் பல்கலைக்கழகத்தில் 112 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் இணைக்கப்பட்டு அவற்றின் வணிக திட்டங்களில் வழிகாட்டுதல் வழங்கப்படுவதைக் குறித்தும் விளக்கினார்.

ஹைதராபாத்தில் உள்ள தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிறுவனத்தின் வேளாண் சந்தைப்படுத்துதல் துறையின் இயக்குநர், முனைவர் ஷலேந்திரா அவர்கள் வேளாண் சந்தைப்படுத்துதல். இந்திய அளவில் கண்டுள்ள மாற்றங்கள் குறித்தும். விளைப் பொருட்களின் விலை நிர்ணயம் குறித்தும் எடுத்துரைத்தார்.

நீலகிரி, கடலூர், செங்கல்பட்டு, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், ராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தென்காசி, திருவாரூர், திருச்சி, திருநெல்வேலி, திருமலை, திருநெல்வேலி உள்ளிட்ட 20 மாவட்டங்களைச் சேர்ந்த மாநில வேளாண்மைத் துறையின் வேளாண் அலுவலர்கள் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் வகுப்பறை அமர்வுகள், மற்றும் கள சுற்றுலாக்கள் ஆகியவை உள்ளடக்கியது. அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் மற்றும் தொழில்முனைவோர் ஆகியோர் வேளாண் சந்தைப்படுத்தல் தகவல், சேமிப்பு கிடங்கு, சந்தை தேவை, நுகர்வோர் விருப்பம் சந்தை வழி விரிவாக்கம், மசாலாப் பொருட்களின் ஏற்றுமதி, வணிக மேம்பாடு, டிஜிட்டல் மார்க்கெட்டிங், சந்தை அடையாளம், சந்தை நுண்ணறிவு, இ–நாம், போன்ற தலைப்புகளின் விளக்கவுரை வழங்கினர்.

பயிற்சியின் ஒரு பகுதியாக, குளோபல் தென்னை வேளாண் உற்பத்தி நிறுவனம் மற்றும் பல்லடத்தில் உள்ள வனம் இந்தியா அறக்கட்டளைக்கு கண்டுனர் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது. உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் "தென்னீரா " பற்றிய விவரங்களை திரு. இளங்கோ, உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் அவர்களும் புதுமையான பசுமை முயற்சிகளை பற்றி திரு. பன்னீர்செல்வம், செயற்குழு உறுப்பினர் அவர்களும் எடுத்துரைத்தனர்.

தமிழ்நாட்டின் மிக வெற்றிகரமான உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், ஈரோடு துல்லிய பண்ணை உற்பத்தியாளர் நிறுவனத்தின் திட்ட அலுவலர் முனைவர் இ.வடிவேல், அவர்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தால் பின்பற்றப்பட்ட விவசாயப் பொருட்களுக்கான வெற்றிகரமான சந்தைப்படுத்தல் உத்திகளை வலியுறுத்தினார்.

லுலு ஹைப்பர் மாலுக்கு விஜயம் செய்ததன் மூலம், ஹைப்பர்மாலில் புதிய காய்கறிகள் மற்றும் பழங்கள் கொள்முதல், சேமிப்பு மற்றும் விற்பனை ஆகிய துறைகளின் விவரங்கள் அறியப்பட்டன. புதிய காய்கறிகள் பிரிவு மேலாளர் திரு.தாமஸ் அவர்கள் சந்தைப்படுத்துதல் நுட்பங்கள் மற்றும் ஆண்டு முழுவதும் விற்பனையில் எவ்வாறு கிடைக்கிறது என்பதையும் எடுத்துரைத்தார்.

13.12.2024 அன்று நிறைவு விழா நடைபெற்றது. வேளாண் வணிக மேம்பாட்டு மையத்தின் இயக்குநர் முனைவர் எ.சோமசுந்தரம் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பி. பொ. முருகன் கலந்து கொண்டு வாழ்த்தினார். தனது உரையில் வேளாண் பொருட்களில் சந்தைப்படுத்துதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார் மற்றும் விவசாயிகளின் தொழில்முனைவோர் திறன்களை மேம்படுத்துவதில் வேளாண்மை அறிவியல் நிலையங்களின் பங்கை எடுத்துரைத்தார்.

இந்தப் பயிற்சித் திட்டத்தை பயிற்சிப் பிரிவு பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ந.ஆனந்தராஜா மற்றும் முனைவர்.சி.சிந்தியா பெர்னாண்டஸ், இணைப் பேராசிரியர், விரிவாக்கக் கல்வி இயக்ககம், அவர்களும் ஒருங்கிணைத்தனர்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*